முன்னாள் காவல் ஆய்வாளர் கஸ்தூரி கொலை வழக்கு

# சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும்

## காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டு இயக்கம் கோரிக்கை



முதற்கட்ட அறிக்கையை மக்கள் கண்காணிப்பு நிர்வாக இயக்குனர் ஹென்றி தீபன் வெளியிட, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் பெற்றுக்கொண்டார். உடன் ஒருங்கிணைப்பாளர் தியாகு, மல்லை சத்யா ஆகியோர் உள்ளனர்.

காஞ்சிபுரம், செப்.22: முன்னாள் காவல் ஆய்வாளர் கஸ்தூரி கொலை வழக்கினை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும் என்று காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டு இயக்கம் கோரிக்கை வைத்துள்ளது.

காஞ்சிபுரம் காலண்டர் தெருவில் வசித்து வந்த, முன்னாள் பெண் காவல் ஆய்வாளர் கஸ்தூரி, கடந்த மாதம் 22ம்தேதி அவரது வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தார். போலீசாரின் விசாரணையில், கஸ்தூரி கொலை செய்யப்பட்டதை உறுதி செய்து, மதிமுக கட்சியின் காஞ்சிபுரம் முன்னாள் மாவட்டச் செயலாளர் வளையாபதி மற்றும் அதிமுக பிரமுககர் பிரபு ஆகியோரை கைது செய்தனர். தற்போது, வளையாபதி வேலூர் மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்.

பிரபுவுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவின்படி செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், வளையாபதி மற்றும் பிரபு ஆகியோர் காவல்துறை விசாரணையின்போது சித்திரவதை செய்யப்பட்டதாக, அவரது குடும்பத்தினர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர். இதுதொடர்பாக காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டு இயக்கம் கள ஆய்வு மேற்கொண்டது. இந்த. கள ஆய்வு அறிக்கை நேற்று காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இவ்வறிக்கை தொடர்பாக மக்கள் கண்காணிப்பாக்கம் நிர்வாக இயக்குநர் ஹென்றி திபேன் நிருபர்களிடம் பேசுகையில், ஓய்வுபெற்ற காவல் அதிகாரி கஸ்தூரி கொலை வழக்கில், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரவேண்டும், சிபிசிஐடி சிறப்பு பிரிவு போலீசுக்கு கஸ்தூரி வழக்கை மாற்ற வேண்டும்.

காஞ்சிபுரம் நத்தப்பேட்டை பகுதியில் பயன்பாட்டில் இல்லாத காவலர் குடியிருப்பில் உள்ள கட்டிடத்தில் வைத்து வளையாபதியை போலீசார் சித்திரவதை செய்துள்ளனர். எனவே, அந்த இடத்தை மனித உரிமை ஆணையம் சீல் வைக்க வேண்டும். ஸ்ரீபெரும்புதூர் ஏஎஸ்பி உதயகுமார், ஏ.டி.எஸ்.பி சார்லஸ் சாமுவேல் துரைராஜ், டிஎஸ்பி மணிமேகலை மற்றும் காவல் ஆய்வாளர் ஜெயவேல் ஆகியோர் இணைந்து, வளையாபதி மற்றும் பிரபு ஆகிய 2 பேரையும் சித்திரவதை செய்துள்ளனர்.

காஞ்சிபுரத்தில் மிக கொடூரமான காவல் சித்திரவதை சம்பவம் நடைபெற்று இருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் இந்த கள ஆய்வு தொடர்பாக சந்திக்கச் சென்றால், சந்திப்பை மறுக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நேரடி கவனத்தில் எடுத்துக்கொண்டு, உதயகுமார் ஏ.எஸ்.பி மற்றும் டிஎஸ்பி மணிமேகலை உள்ளிட்டோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் தற்காலிக பணியிட நீக்கம் செய்யப்பட வேண்டும். வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது நடைபெற்ற சித்திரவதையை விட அதிகளவு சித்தரவதை இவர்களுக்கு நடைபெற்றிருக்கிறது என்று தெரிவித்தார்.

நிகழ்வில் காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டு இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தியாகு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சுதா ராமலிங்கம், மதிமுக துணை பொதுச் செயலாளர் மல்லை சத்யா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாசறை செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.